## 33

# இனிப்பும் கசப்பும்

## (10:1–4, 8–11)

*சபையானது, ஆபத்துமிகுந்த காலங்களை எதிர்கொள்ளும்போது அது என்ன செய்ய வேண்டும்? ஒளிந்து கொள்ள வேண்டுமா? தேவன் இடையிடுவதற்காகக் காத்திருந்து நடுநடுங்க வேண்டுமா? எவரொருவரின் மனதையும் புண்படுத்தாதவாறு தனது செய்தியை மென்மையாக்கிக் கொள்ள வேண்டுமா? வெளிப்படுத்தின விசேஷம் 10 மற்றும் 11 ஆகிய அதிகாரங்கள், சபையானது ஆபத்து வேளைகளில் தைரியமாய், ஊக்கமாய், இன்னும் வெளிப்படையாய்ப் பேசுகிறதாய் இருக்க வேண்டும் என்று அறிவிக்கிறது. அதிகாரம் 11ல் உள்ள இரண்டு சாட்சிகளின் நாடகத்துவமான நிகழ்ச்சியில், விளைவுகளைப் பொருட்படுத்தாமல் வசனத்தைப் பிரசங்கித்தல் என்பதை சபைக்கு ஒரு அறைகூவலாக நாம் காண்போம்.*

*சபையானது, இப்படிப்பட்ட ஒரு கடினமான அறைகூவலைச் சந்திக்க முடிவது எவ்வாறு? முதலில் வசனத்தை மதிப்பதினாலும் பின்பு அதை ஏற்புடையதாகச் செய்வதினாலும் நாம் இதைச் சந்திக்க முடியும் என்று அதிகாரம் 10 வலியுறுத்துகிறது. நமது முந்திய பாடம் (வசனத்தை) மதித்தல் மீதானதாக இருந்தது; இந்தப் பாடம் ஏற்புடையதாக்குதலை வலியுறுத்தும்.*

### வேண்டுகோள் *(10:1-4, 8, 9)*

*அதிகாரம் 10ன் முதல் ஏழு வசனங்கள் "திறக்கப்பட்ட ஒரு சிறு புத்தகத்தைக் கையில் வைத்திருந்த பலமுள்ள தூதனைப் பற்றி" நமக்கு கூறுகிறது (வசனங்கள் 1, 2). இந்த சிறு புத்தகம் தேவனிடத்தில் இருந்து வந்த செய்தியாக இருந்தது.*

*வசனம் 8, கவன வெளிச்சத்தைத் தூதனிடத்தில் இருந்து யோவானிடத்திற்குத் திருப்புகிறது: "நான் வானத்திலிருந்து பிறக்கக்கேட்ட சத்தம் மறுபடியும் என்னுடனே பேசி" (வசனம் 8அ). இது, ஏழு இடிகள் கூறியதைப் பதிவுசெய்ய வேண்டாம் என்று அவருக்கு முன்பு அறிவுறுத்தியிருந்த குரலாக இருந்தது (வசனங்கள் 3, 4). இப்போது அந்தக் குரல் அவரிடத்தில், "சமுத்திரத்தின்மேலும் பூமியின் மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கும் திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தை நீ போய் வாங்கிக்கொள்" என்று கூறிற்று (வசனம் 8ஆ).[1]*

*யோவான், கவனிப்பவர் என்ற பாத்திரத்தில் இருந்து திடீரென்று, பங்கேற்பாளர் என்ற பாத்திரத்திற்கு செலுத்தப்பட்டார். நீங்கள் மேடையில் நடக்கும் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது,*

*மேடைக்கு வரும்படி அழைக்கப்பட்டால் நீங்கள் எவ்வாறு உணருவீர்கள் என்பது பற்றிக் கற்பனை செய்து பாருங்கள், நீங்கள் அநேகமாக, திகைப்பு, உணர்வெழுச்சி, இனம்புரியாத பயம் போன்ற உணர்வுகளின் கலவையை உணர்வீர்கள். யோவானும் இதேபோன்ற மறுசெயல்களைக் கொண்டிருந்து இருக்கலாம். அவர் அவ்வாறு கொண்டிருந்தால், அவைகள் அவரைத் தயங்கச் செய்யவில்லை. அவர், "நான் தூதனிடத்தில் போய்: அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன்" என்று கூறினார் (வசனம் 9அ).*

*தூதன், ''நீ இதை வாங்கிப் புசி'' என்றார் (வசனம் 9ஆ). அதைப் புசிப்பதா? "நாம் புத்தகங்களைப் புசிப்பது இல்லையே! நாம் அவற்றை அலமாரியில் தூசு படியும்படி விட்டு வைக்கின்றோம்; பூக்களை (சேமிப்பதற்காக) அழுத்துவதற்கும் உடைந்த கால்கள் கொண்ட மேஜையைத் தாங்கி நிறுத்துவதற்கும் அவற்றை நாம் பயன்படுத்துகின்றோம்; அவ்வப்போது அவற்றை நாம் படிக்கவும் செய்கின்றோம்; ஆனுல் அவற்றை நாம் புசிப்பதில்லையே!" அல்லது நாம் அவ்வாறு செய்கின்றோமா? உண்மையில் நாம் இன்றைய நாட்களில் இதைப்போன்ற சொல்விளக்கங்களைப் பயன்படுத்துகின்றோம். நாம் மகிழ்வுடன் அனுபவிக்கும் புத்தகத்தைப் பட்சித்தல் என்பது பற்றி நாம் பேசுகின்றோம். ஃரான்சீஸ் பேக்கன் என்பவர், "சில புத்தகங்கள் ருசித்துப் பார்ப்பதற்குரியவைகள், மற்றவைகள் விழுங்கப்பட வேண்டியவைகள், இன்னும் சில மெல்லப்படவும் செரிக்கப்படவும் உரியவைகள்'' என்று கூறினார்.[2]*

*புத்தகம் ஒன்றை ''புசித்தல்'' என்பதன் உருவகம், யோவானுக்கு வழக்கமற்றதாக காணப்பட்டிராது. எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு, "... இந்தச் சுருளை நீ புசித்து, ... உன் வயிற்றிலே உட்கொண்டு, அதினால் உன் குடல்களை நிரப்புவாயாக'' என்று கட்டளையிடப்பட்டிருந்தது (எசேக்கியேல் 3:1-3).[3] எரேமியா தேவனுடைய வசனத்தைப் பற்றிப் பேசியபோது, "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன், உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது" என்று அவர் கூறினார் (எரேமியா 15:16அ). வேதாகமம் தேவனுடைய வசனத்தை, உண்ணக்கூடிய உணவுடன் அடிக்கடி ஒப்பிடுகிறது (மத்தேயு 4:4; 1 கொரிந்தியர் 3:1, 2; எபிரெயர் 5:12-14; 1 பேதுரு 2:2).*

*எபிரெயச் சிந்தனையில், ஒரு நபர் ஒரு புத்தகத்தை "உண்ணும்"போது, அவர் அதன் வார்த்தைகளே ருசித்துப் பார்க்கின்றார், அதன் போதனைகளேச் சுவைத்துப் பார்க்கின்றார், மற்றும் அதன் உண்மைகளைத் தமக்குள்ளாக ஜீரணித்துக் கொள்கின்றார். இராபர்ட் முல்ஹாலன்ட் அவர்கள், "இந்த உருவகமானது, ஒருவர் தேவனுடைய வசனங்கள் தம்முடைய வாழ்வை இயக்கும் கொள்கையாகும்படி அவற்றை முற்றிலுமாய் உள்வாங்குதல் என்பதாக உள்ளது" என்று எழுதினார்.[4] உண்மையில் யோவான், அந்தச் செய்தியைத் தமது இருப்பில் ஒரு பகுதியாக்கிக் கொள்ளும்படி கட்டளையிடப்பட்டார். தேவனுடைய செய்தியையும் தேவனுடைய செய்தியாளரையும் பிரிக்க முடியாது.*

*ஒவ்வொரு கிறிஸ்தவரும், தேவனுடைய வசனத்தைத் தமது உள்முழுமைப் பகுதியாக்குதல் என்பது இன்றைய நாட்களில் சபைக்கான மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது. இது வசனத்தை அவ்வப்போது ருசித்துப் பார்ப்பதினாலேயோ அல்லது வாராந்திரமாக சிறிதளவு கடிப்பதினுலேயோ சாதிக்க முடியாததாக உள்ளது. நாம் வசனத்தை "உண்ண" வேண்டும்! அது நமது சிந்தைகளின் பாகம் ஆகும் வரையிலும் நாம் அதை வாசிக்க வேண்டும். அது நமது இருதயங்களின் பாகம் ஆகும்வரையிலும் நாம் அதைப் படிக்கவேண்டும். அது நமது ஆத்துமாக்களின் பாகம் ஆகும் வரையிலும் நாம் அதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அது நமது வாழ்வின் பாகம் ஆகும் வரையிலும் நாம் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். பின்பு, அதன்பின்பு மட்டுமே, "கிறிஸ்துவின் வசனம் (நமக்குள்ளே) சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருக்கும்" (கொலோசெயர் 3:16அ).*

*யோவான் அந்தப் புத்தகத்தை உண்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கையில், அதன்மூலம் விளைவுகள் ஏற்படும் என்பதைத் தூதன் எச்சரிக்கை செய்தார்: "இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதுரமாயிருக்கும்" (வசனம் 9இ).*

*தேவனுடைய வசனத்தை நேசிப்பவர்களுக்கு, "தேனைப்போல மதுரமாயிருக்கும்" என்ற சொற்றொடரைப் புரிந்து கொள்வதில் பிரச்சினை இருப்பதில்லை. சங்கீதக்காரர், "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்" என்று கூறினுர் (சங்கீதம் 119:103; சங்கீதம் 19:10ஐயும் காணவும்).*

*இதற்கு மறுபுறத்தில், "இது உன் வயிற்றுக்கு கசப்பாயிருக்கும்"[5] என்ற கூற்றானது சிலருக்கு வினோதமானதாக காணப்படலாம் - ஆனால் ஏதாவது ஒரு காலவேளையளவுக்கு வசனத்தைப் போதித்துள்ளவர்கள், செய்தியின் கசப்பு இனிப்பான தன்மையைப் புரிந்து கொள்வதில் பிரச்சினை எதையும் கொண்டிருக்கமாட்டார்கள். வசனத்தைப் போதித்தலும் பிரசங்கித்தலும் உங்கள் முகத்தில் புன்னகையை வைக்கும், ஆனுல் அது உங்கள் கண்களில் கண்ணீரைக் கொண்டுவரவும் முடியும்.*

*எசேக்கியேலின் தீர்க்கதரிசனப் புத்தகத்தின்படி, எசேக்கியேலுக்குக் கொடுக்கப்பட்ட புத்தகச்சுருளை அவர் புசித்தபோது, அது அவரது வாய்க்குத் "தேனைப்போல் தித்திப்பாயிருந்தது" (எசேக்கியேல் 3:3); ஆனுல் அந்தப் புத்தகச்சுருளில் "புலம்பல்களும், தவிப்பும், ஐயோ என்பதும்" அடங்கியிருந்தபடியால் (எசேக்கியேல் 2:10), தீர்க்கதரிசி விரைவிலேயே "மனங்கசந்து" போனார் (எசேக்கியேல் 3:14). எரேமியா தேவனுடைய வசனத்தை உண்டபோது, அவைகள் அவரது இருதயத்திற்குச் "சந்தோஷமும் மகிழ்ச்சியுமாய்" இருந்தன (எரேமியா 15:16); ஆனுல் பிற்பாடு அவர், "நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும், பரிகாசமுமாயிற்று" என்று கூறினார் (எரேமியா 20:8).*

*யோவானுக்குக் கிடைத்த கசப்பும் இனிப்புமான செய்தியைப் பற்றி, அதன் "கசப்பான" பகுதியில் அடங்கியிருந்தது என்ன: (அ) அந்த*

*அப்போஸ்தலர் பாவத்தை வெளிப்படுத்தியாக வேண்டும் என்ற உண்மையா (9:21; 18:3)? (ஆ) அவர் உரைக்கவிருந்த செய்தியானது மனந்திரும்பாதவர்களுக்கு தண்டனையைப் பற்றியது என்ற உண்மையா (19:20; 20:10, 15)? (இ) பெரும்பான்மையான மனிதர்கள் அவருடைய செய்தியைப் புறக்கணிப்பார்கள் என்ற உண்மையா (9:20, 21; 16:11)? (ஈ) மனிதகுலமானது செய்தியாளரைத் துன்புறுத்துவதன் மூலம் செய்திக்குப் பதில்செயல் செய்யும் என்ற உண்மையா (11:7;12:17)? "மேற்கண்ட எல்லாமுமே" என்பதே என்னுடைய பதிலாக இருக்கும்.*

## *பதில்செயல் (10:10)*

*புத்தகத்தை உண்பதால் ஏற்படும் விளைவுகள் யோவானைத் தடுத்து நிறுத்தவில்லை. அவர், "நான் அந்தச் சிறு புஸ்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கி, அதைப் புசித்தேன்" என்று கூறினார் (வசனம் 10அ). ("புத்தகத்தை யோவான் உண்ணுதல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) தூதன் முன்னுரைத்தபடியே விளைவு ஏற்பட்டது: "என் வாய்க்கு அது தேனைப்போல் மதுரமாயிருந்தது, நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று" (வசனம் 10ஆ).*

*துரதிஷ்டவசமாக, இன்றைய நாட்களில் பலர் கசப்பும் இனிப்புமான செய்தியை விரும்புவதில்லை, செய்தியாளரிடத்தில் அவர்கள், ஏசாயாவின் நாட்களில் இருந்த மக்களைப்போல், "எங்களுக்கு இதமான சொற் றொடர்களை (மாத்திரம்) உரையுங்கள்" (ஏசாயா 30:10இ; 2 தீமோத்தேயு 4:3ஐக் காணவும்) என்று கூறுகின்றனர். இருந்தபோதிலும், தேவனுடைய உண்மையான செய்தியாளர்களாயிருப்பவர்கள், தாங்கள் எதைப் பிரசங்கிப்பது மற்றும் எதைப் பிரசங்கிக்காதிருப்பதுஎன்று தேர்ந்து கொள்ளும் வசதியைப் பெற்றிருப்பதில்லை. அவர்கள் "தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் ... (அறிவித்தாக வேண்டும்)" (நடபடிகள் 20:27); அவர்கள், "கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்ல" வேண்டும் (2 தீமோத்தேயு 4:2).*

H. L. *எல்லிஸன் அவர்கள், "சுவிசேஷத்தைத் சிதைக்காமல் அதில் இருந்து நீக்கிப்போடப்படக்கூடாத ஒரு கசப்பான கூறு சுவிசேஷத்தில் உள்ளது'' என்று கூறினார்.*[6] *மனிதர்கள் பாவத்தினால் குற்றம் உணர்த்தப்படாத வரையிலும் கிருபைக்காக ஏங்க மாட்டார்கள். அவர்கள் இழந்து போகப்பட்டிருத்தல் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாத வரையிலும் இரட்சிப்பை நாடமாட்டார்கள். அவர்களுக்கு நரகத்தின் பயங்கரம் பற்றிய சத்தியங்கள் வெளிப்படுத்தப்படாத வரையிலும் அவர்கள் பரலோகத்தின் சந்தோஷத்தை முழுமையாக மதித்து உணரமாட்டார்கள்.*

*ஒவ்வொரு கிறிஸ்தவரும், தேவனுடைய வசனத்தைத் தமது உள்முழுமைப் பகுதியாக்குதல் என்பது இன்றைய நாட்களில் சபைக்கான மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது என்று நான் முன்னரே குறிப்பிட்டிருந்தேன். இனிப்புடன் கசப்பையும் நாம் ஏற்றுகொள்ள*

*விரும்பினால் மாத்திரமே இது செய்யப்பட முடியும். இனிப்பை விழுங்கி, கசப்பை வெளியே துப்பிவிடுதல் என்ற விருப்பத் தேர்வைத் தேவன் எவரொருவருக்கும் கொடுத்திருக்கவில்லை. அவரை பிரியப்படுத்துவதற்கு நாம், ''முழுவதையும் உண்ண வேண்டும்.'' எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும், எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிய வேண்டும்.*

## *பொறுப்பு (10:11)*

*யோவான் தமது பசியைத் தணித்துக் கொள்வதற்காக மட்டுமோ அல்லது ஒரு பிற்பகல் சிற்றுண்டியைத் தமக்கு அளித்துக் கொள்வதற்காக மட்டுமோ அந்தச் சிறு புத்தகத்தை உண்ணும்படி கூறப்படவில்லை. மாறாக, அந்தப் புத்தகத்தை உண்ணுதல் என்பது அவரை, மேலும் ஊழியத்திற்குத் தயார்செய்விப்பதற்காக இருந்தது (10:9-11ஐ எசேக்கியேல் 3:1, 4 உடன் ஒப்பிடவும்). அந்த அப்போஸ்தலர் புத்தகத்தை உண்ட உடனே, ''நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங்[7]குறித்துத்[8] தீர்க்கதரிசனஞ்சொல்ல வேண்டும்'' என்று அவருக்குக் கூறப்பட்டது (வசனம் 11).[9] யோவான் வெளிப்படுத்துதலில் அடையாளக்குறியின் பாதி வழியைக் கடந்து வந்திருந்தார், இன்னும் அதிகமானது வரவிருந்தது. (வெளிப்படுத்தின விசேஷம்) புத்தகத்தின் பிற்பகுதியானது "ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங் குறித்து" கூறுவதற்கு அதிகமானவற்றைக் கொண்டுள்ளது.*

*யோவான் ''மீண்டும் தீர்க்கத்தரிசனஞ் சொல்ல'' வேண்டும் என்று அவருக்கு ஏன் கூறப்பட்டது?[10] ஒருவேளை இது, வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதும் பணிப்பொறுப்பை முடிக்கும்படி அவரை உற்சாகப் படுத்துவதற்கானதாக இருந்திருக்கலாம். வெளிப்படுத்தின விசேஷத்தின் மனக்கிலியை ஏற்படுத்துகிற உலகத்தில் மணிக்கணக்கில் செலவிடுதலில் உள்ள கடுமையான சோர்வை என்னால் கற்பனை செய்து பார்க்கக்கூட இயலவில்லை. ஒருவேளை இந்த உற்சாகமூட்டுதல் என்பது மிகப்பொதுவானதாக இருந்திருக்கலாம். அந்த அப்போஸ்தலர், பத்மு தீவில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தபோது, அவர் தமது செயல்முனைப்புள்ள ஆண்டுகள் முடிந்துபோய் விட்டதாக நினைத்திருக்கலாம். வெளிப்படுத்தின விசேஷத்தை அவர் (எழுதி) முடித்த பின்பும்கூட, அவர் செய்வதற்கு ஊழியம் இருக்கும் என்று அவர் அறிவது அவசியமாய் இருந்தது. கடைசியில் அவர், பத்முதீவில் இருந்து விடுவிக்கப்படுவார் மற்றும் அவர் தமது செயல்பாட்டை மீண்டும் தொடர முடியும்.[11]*

*யோவானுக்கு இந்த அறிவுறுத்தல் தரப்பட்ட காரணம் எதுவாக இருந்தபோதிலும், அவருக்கு முன்பாக இருந்த பணிப்பொறுப்பானது விருப்பத்தேர்வாக இருந்ததில்லை. வசனம் 11ல் உள்ள "வேண்டும்" என்ற வார்த்தையானது, "ஒழுக்கம் சார்ந்த அவசியம்" என்று சுட்டிக்காண்பிக்கிற* dei *என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவர், ''... மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங்குறித்துத் தீரிக்கதரிசனஞ்சொல்ல"*

*வேண்டியிருந்தது. அந்த அப்போஸ்தலருடைய ஊழியமானது அவரைச் சந்தோஷப்படுத்தும் என்றோ அல்லது அவரை "நிறைவடைந்ததாக உணரச் செய்யும்'' என்றோ அவருக்குக் கூறப்படவில்லை, ஆனுல் அது அவசியமானதாக இருந்தது. என்ன விலை செலுத்த நேர்ந்தாலும் வசனத்தைப் பிரசங்கிக்க விருப்பமாய் இருந்த யோவான் போன்ற மனிதர்களுக்காகத் தேவனுக்கு நன்றி?*

*வசனம் 11ல் உள்ள கட்டளையானது யோவானை நோக்கித் திருப்பப்பட்டிருந்தது, ஆனுல் அதன் நடைமுறைப் பயன்பாட்டை ஒவ்வொரு கிறிஸ்தவரை நோக்கியும் திருப்ப முடியும். எல்லா மக்களுக்கும் வசனத்தை எடுத்துச் செல்லுதல் என்ற ஒழுக்கரீதியான கட்டுப்பாட்டைக் கர்த்தர் நம் ஒவ்வொருவர் மீதும் சுமத்தியுள்ளார் (மத்தேயு 28:19, மாற்கு 16:15; லூக்கா 24:47). அதிகாரம் 10, நம் ஒவ்வொருவரிடத்திலும், வசனத்தை மதிக்கும்படியும், வசனத்தை ஏற்புடையதாக்கும்படியும், பின்பு அதை மற்றவர்களிடத்தில் பகிர்ந்து கொள்ளும்படியும் அறைகூவல் விடுக்கிறது.*

*மனிதனின் வாழ்வில் இரண்டு முக்கிய தினங்கள் உள்ளன: முதலாவது, அவன் பிறந்த நாள், மற்றும் இரண்டாவது அவன் தான் ஏன் பிறந்தான் என்பதை அறிகின்ற நாள் என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.[12] தேவனை மகிமைப்படுத்துதல் என்பதே நமது இருப்பின் முதன்மையான நோக்கமாக உள்ளது என்று வேதாகமம் போதிக்கிறது (மத்தேயு 5:16; 1 கொரிந்தியர் 6:20; 1 பேதுரு 2:12; 4:16) - மற்றும், அவரது வசனத்தைப் பிறருக்குக் கூறுதல் என்பது, நாம் அதை (தேவனை மகிமைப்படுத்துதலை)ச் செய்வதற்கான முக்கியமான ஒரு வழியாக உள்ளது.*

## *முடிவுரை*

*வசனத்தை அறிவிப்பதற்கான அறைகூவல் என்பது அடுத்த அதிகாரத்தின் முதன்மைச் செய்தியாக இருக்கும். நாம் அந்த அறைகூவலைச் சந்திப்பதற்கு முன்பு, வசனமானது நமக்கு எல்லாமுமாக அர்த்தப்பட வேண்டும். வசனத்தை நாம் பிறருடன் பகிர்ந்து கொள்ளக் கூடியவர்களாவதற்கு நாம் அந்த வசனத்தை நமக்குப் பொருத்தமான தாக்கும்படிக்கு எவ்வளவு நேரத்தைச் செலவிடுகின்றோம்? சபையானது இடர்ப்பாட்டின் வேளைகளில் உயிர்பிழைத்திருக்க வேண்டுமென்றால், கிறிஸ்தவர்கள் முதலில் புத்தகத்துடன் நெருங்கியிருக்க வேண்டும் என்று அதிகாரம் 10 அறிவிக்கிறது![13]*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*''செய்தியின் கசப்பான இனிப்புத்தன்மை,'' ''தேவனுடைய செய்தியாளராக இருப்பதின் மகிழ்வும் வருத்தமும்,'' மற்றும் "ஒருக்காலும் முடிவு பெற்றிராத ஒரு வேலை'' என்பவை இப்பாடத்திற்கான மற்ற தலைப்புகளில் உள்ளடங்கும்.*

குறிப்புகள்

[1]இந்தத் தரிசனத்தில் யோவான், இப்போது "பரலோகத்தில்" இருப்பதற்குப் பதிலாக "பூமியில்" இருந்தார் என்று தோன்றுகிறது (4:1). தரிசனம் ஒன்றில் யோவான், சரீரப்பிரகாரமாக எங்கும் செல்லாமலேயே, இவ்விரு இடங்களிலும் இருக்க முடிந்திருந்தது. [2]Francis Bacon, *Of Studies*, quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, gen. ed. Justin Kaplan (Boston: Little, Brown and Co., 1992), 160. பேக்கன் (1561-1626) என்பவர் ஒரு ஆங்கிலக் கட்டுரையாளராக, வழக்கறிஞராக, அரசியல் பிரமுகராக, மற்றும் ஒரு தத்துவ ஞானியாக இருந்தவர். அவரது கூற்றுடன் நாம் பின்வருவதைச் சேர்க்க முடியும்: "மற்றும் சில(புத்தகங்கள்) விஷத்தைப்போல் தவிர்க்கப்பட வேண்டியவைகளாயுள்ளன." [3]எசேக்கியேல் 2:8 முதல் 3:14 வரை வாசித்து, அதை வெளிப்படுத்தின விசேஷம் 10 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். [4]M. Robert Mulholland, Jr., *Revelation: Holy Living in an Unholy World*, Francis Asbury Press Commentary, gen. ed. M. Robert Mulholland, Jr., (Grand Rapids, Mich.: Francis Asbury Press, 1990), 201. [5]அமெரிக்காவில் நாங்கள் இன்னமும் இதே போன்ற பின்வரும் சொல்விளக்கத்தைப் பயன்படுத்துகின்றோம்; ஒரு கசப்பான செய்தியைப் பற்றி நாங்கள் "a bitter pill to swallow" ("விழுங்குவதற்குக் கசப்பான ஒரு மாத்திரை") என்று கூறுகின்றோம். [6]H. L. Ellison, *1 Peter - Revelation*, Scripture Union Bible Study Books Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1969), 63. [7]இந்தப் பாடத்தில் முன்பே குறிப்பிட்டபடி, இந்தப் பட்டியலானது "எங்குமுள்ள எல்லா மனிதர்களையும்" குறிப்பதற்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் வேறொரு இடத்தில் பயன்படுத்தப்பட்டது (7:9; 11:9; 17:15 ஆகிய வசனங்களைக் காணவும்). இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க ஒரு வேறுபாடு காணப்படுகிறது: "ஜாதிகள்" என்பதற்குப் பதில் "இராஜா" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஒருவேளை, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பிற்பகுதியில் (அதிகாரம் 17ஐக் காணவும்) இராஜாக்களைப் பற்றிய குறிப்பு உள்ளதன் காரணமாக இவ்வாறு இருந்திருக்கலாம். [8]அதிகம் கலந்துரையாடப்படும் ஒரு தலைப்பு என்பது, "குறித்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க முன்னிடை சொல்லின் அர்த்தமாக உள்ளது. *Epi* என்பது இவ்வார்த்தையாக உள்ளது, "on" ("மீது") என்பது இதன் அடிப்படை அர்த்தமாக உள்ளது. இவ்வார்த்தை "before" ("முன்னதாக") என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று சிலர் வலியுறுத்துகின்றனர் (KJV வேதாகமத்தைக் காணவும்), ஆனால் இந்த முன்னிடைச் சொல்லைத் தொடர்ந்து வருகிற செயப்படுபொருளின் விஷயமானது "on, about, concerning" ("மீது, பற்றி, குறித்து") என்பதே இதன் அர்த்தமாயிருக்கலாம் என்று சுட்டிகாண்பிக்கிறது. NKJV வேதாகமத்தில் "about" என்றுள்ளது. [9]வசனப்பகுதியில் இவ்விடத்தில் "And they said to me" [என்று "அவர்கள் என்னிடத்தில் கூறினர்"] என்றுள்ளது. "அவர்கள்" என்பது யார் என்று நாம் உறுதியாக அறிவதில்லை - இது ஒருவேளை, தூதனும் அத்துடன் குரலும் என்றோ அல்லது, ஒருவேளை தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் என்றோ இருக்கலாம். இந்தச் சொற்றொடர், "அது எனக்கு கூறப்பட்டிருந்தது" என்று மாத்திரம் அர்த்தப்படுவதாக இருக்கலாம் என்று கிரேக்கக் கல்வியாளர்கள் கூறுகின்றனர். [10]இந்த வார்த்தைகள், வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதும் பணிப் பொறுப்பு தேவனால் அப்போஸ்தலருக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது என்பதை மறு உறுதிப்படுத்துவதற்கு, யோவானுடைய வாசகர்களுக்குப் போலவே யோவானுக்கும், அதிகமாக நோக்கங்கொண்டிருந்தன என்று சிலர் நினைக்கின்றனர்.

[11]யோவான் பத்மு தீவில் இருந்து விடுவிக்கப்பட்டதற்குப் பின்பு செய்த ஊழியங்கள் குறித்துக் கணிசமான அளவுக்கு யூகங்கள் கிடைக்கின்றன. (ஏவுதல் பெற்றிராத) பலத்த பாரம்பரியம் ஒன்று, அவரது கடைசி ஆண்டுகள் எபேசு நகரில்

*செலவிடப்பட்டன என்று கூறுகிறது, ஆனால் அதைத் தவிர அவர் செய்த பிந்திய ஊழியங்கள் பற்றி நாம் யூகிக்க மட்டுமே முடியும்.* [12]Jim McGuiggan, *The Book of Revelation,* Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 106. [13]*இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுதல் பற்றிய "இனிப்பு" என்ன மற்றும் அதை மறுத்தல் பற்றிய "கசப்பு" என்ன என்பவற்றைக் கலந்துரையாடுதல் என்பது சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும்படி மக்களை அழைப்பதற்கான ஒரு சிறந்த வழியாக இருக்கும். மாற்கு 16:15, 16 இரட்சிப்பைப் பற்றி மாத்திரமல்ல, ஆனுல் ஆக்கினையைப் பற்றியும் பேசுகிறது. ரோமர் 6:23ம் வசனம் தேவனுடைய வரத்தைப் பற்றிப்பேசுகிறது. ஆனுல் அது பாவத்தின் சம்பளத்தைப் பற்றியும் பேசுகிறது. கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன்மூலம் "இனிப்பை அதிகமாக்கி கசப்பைக் குறைக்கும்படி" மக்களை ஊக்கப்படுத்துங்கள்.*

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *அதிகாரம் 10ன் முதல் ஏழு வசனங்களை மறுகண்ணோட்டமிடவும்.*
2. *புத்தகத்தை நாம் எந்தக் கருத்தில் "உண்ண" முடியும்? தேவனுடைய வசனத்தை "உண்ணுதலில்" உள்ளடங்கியிருப்பது என்ன?*
3. *தேவனுடைய வசனம் எந்தக் கருத்தில் "இனிப்பாக" உள்ளது? அது எந்தக் கருத்தில் "கசப்பாக" உள்ளது?*
4. *நாம் "இனிப்புடன்" சேர்ந்துக் "கசப்பையும்" எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளதா?*
5. *யோவான் புத்தகத்தை உண்ட பின்பு அவர் என்ன செய்யும்படி கூறப்பட்டார்? அதே போன்ற கட்டளை நமக்கும் தரப்பட்டுள்ளதா?*



*புத்தகத்தை யோவான் உண்ணுதல் (10:10அ)*